## செப்டம்பர் - 7

**"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின."   - 2கொரி 5 : 17**

கிறிஸ்துவுக்குள் இருக்கிற இந்தப் புது சிருஷ்டிகள் மாம்சத்தின்படி இல்லாமல் ஆவியின்படி ஒருவரை ஒருவர் அறிகிறார்கள். மாம்சபிரகாரமான அவர்களுடைய பலவீனங்கள் எதுவாயிருந்தாலும் ஒருவரிலொருவரிடத்திலுள்ள ஆவியில் அல்லது புதிய மனதில் மிக உயர்ந்த மனோபாவங்கள், உயர்ந்த நாட்டங்கள், நன்மையானதும், உண்மையானதும், உயர்வானதும், சுத்தமானவைகளும் இருக்கின்றன. இந்தப் புதிய கருத்திற்கேற்றவாறுள்ள நோக்கம், சித்தம் தேவனோடுள்ள இணக்கம் இவைகளிலிருந்து அவர்கள் ஒருவரிலொருவர் அன்பு கொள்கிறார்கள். எதிராளி, மாம்சம், உலகம் இவைகளின் தீங்கான வசீகர சக்திகளுக்கு எதிராக விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவதில் ஒருவருக்கொருவரிலுள்ள சக்தியைக் காணும்போது தங்களுடைய சிநேகம் அதிகமாக வளருகிறது. யேசுக்கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற புது சிருஷ்டிகளுக்கு ஊடே தொடர்ந்து இருக்கிற அன்பையும் சிநேகத்தையும் நாவோ அல்லது பேனாவோ தகுந்த விதமாக வெளியிடக் கூடாததாயுமிருக்கிறது. அவர்களுக்கு எல்லாப் பழையவைகளும் ஒளிந்து போயின. எல்லாம் புதிதாயின.! **- Z ’03, 333 (R 3232)**

யேசு கிறிஸ்துவுக்குள்ளிருப்பது கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு அங்கமாக தனக்கு மரித்து, தேவனுக்கென்று பிழைத்திருப்பதைக் குறிக்கிறது. அப்படிப்பட்டவன் ஒரு புது சிருஷ்டியாயிருக்கிறான். ஏனென்றால், தக்க ஆவிக்குரிய பொருட்களின் மேல் தன்னுடைய மனதின் இருதயத்தின் பல்வேறு திறமைகளை உபயோகிக்க அவனைத் தகுதியாக்கி அவனுடைய மூளையின் எல்லா உறுப்புகளுக்கும் ஆவிக்குரிய சக்திகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவன் இயற்கையான மனிதன் உயர்வாக மதிக்கிறவைகளிலிருந்து தன்னுடைய பற்றுதல்களை பிரித்து அவைகளை ஆவிக்குரிய மனிதனால் உயர்வாக மதிக்கப்படுகிறவைகளுடன் இணைக்கிறான். அதற்கு ஒத்தாற்போல் அவனுடைய முந்திய உலகப்பிரகாரமாக முன்னேறும் ஆசைகளும், விருப்பங்களும், நாட்டங்களும் கைவிடப்படுகின்றன. இப்பொழுது அவன் புது விருப்பங்களையும் முன்னேறும் ஆசைகளையும், நாட்டங்களையும் உடையவனாயிருக்கிறான். அவன் எவைகளை அடைய வேண்டுமென்று நிச்சயம் செய்திருக்கிறானோ அவைகளை அடைய அவன் சரீர சம்பந்தமாகவுள்ள அவனுடைய எல்லா சக்திகளையும் ஈடுபடுத்துகிறான். இவைகள் நிச்சயமாகவே அவன் முன்பு பற்றிக் கொண்டிருந்ததை விடச் சிறந்ததாக இருப்பதைக் காண்கிறோம். **- P ’33, 147.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**2கொரி 5:16; கலா 5:6,16-24; 6:1,2,7,8,14-16; கொலோ 3:1-17; ரோம 8:4-16; எபி 12:1,5,9-16; ரோம 12:2,9-21; 1யோவா 2:15-17,20,27; 5:4,5.**

**கோபுர வாசிப்பு : Z ’13, 300 (R 5325).**